70

13 JUN 1922

உ

சொக்கலிங்கப்பெருமானது

# திருவிளையாடற்

# காவடிச் சிந்து

## திருப்புகழ்

இரண்டாம் பாகம்.



மதுரை புஸ்தக வியாபாரம்,

பி. நா. சிதம்பர முதலியார் அன் கோ,

இதன் விலை] வெளியிட்டது [அணா 3

1921.

காபி ரைட்

O-, IMRV.C
N21
85906

9

உ

திருச்சிற்றம்பலம்.

13 JU

சொக்கலிங்கப்பெருமானது

திருவிளையாடற்

# காவடிச்சிந்து திருப்புகழ்

இரண்டாம் பாகம்.


இஃது

மதுரைமாநகர்

மகா-ள-ள-ஸ்ரீ

வித்வான்-சடகோபதாஸர் அவர்கள்

குமாரர்

சங்கீத வித்வரத்னம்

இராஜவடிவேல்தாஸர்

இயற்றியது



மதுரை புஸ்தக வியாபாரம்

பி. நா. சிதம்பரமுதலியார் & கோ

வெளியிட்டது.


காப்பிரைட் ரிஸர்வ்டு]

[விலை அணா—4.


ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.

1921

# விளம்பரம்.

ஸ்ரீமான் மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமாரர் மகா-௱-௱-ஸ்ரீ M. R. S. வேல்சாமிக் கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வாஞ்சித மெனும் பக்திரஸகீர்த்தனம்.

முதல்பாகம் ... ... விலை ரூ. 0—5—0

இரண்டாம்பாகம் ... ... ,, 0—5—0

செட்டிநகர் வித்வான் இராமசாமிக் கவிராயர் அவர்க ளியற்றிய பக்திரஸகீதாமிர்தம் ... ... ... 0—4—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரசன் சண்முகனார் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரசக்கீர்த்தனம்... ... ... 0—4—0

## அச்சில்! சீக்கிரம் வெளிவரும்!!

கன்னி ஜமீன் சரபம் மகா-௱-௱-ஸ்ரீ

உடுமலை முத்துசாமிக் கவிராயர் அவர்கள்

மாணாக்கர் R. K. பூமிபாலக தாஸ் இயற்றிய

பரசுராசேகர பக்திரஸகீத மெனும் பக்திரஸகீர்த்தனங்கள்.

முதல்பாகம் ... ... ... விலை ரூ. 0—5—0

இரண்டாம்பாகம் ... ... ,, 0—5—0

ஷையார் இயற்றிய அடியிற்கண்ட

**13-டிராமா சரித்திரங்கள் நூதன வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றவை.**

1—சதாரம் சரித்ரம்
2—வள்ளி சரித்ரம்
3—நல்லதங்காள்சரித்ரம்
4—கோவிலன் சரித்ரம்
5—லலிதாங்கி சரித்ரம்
6—சாரங்கதரன் சரித்ரம்
7—அல்லி சரித்ரம்
8—பாரிஜாத புஷ்ப ஹரணம்
9—சகுந்தலா சரித்ரம்
10—சத்தியவான்சாவித்ரி சரித்ரம்
11—ஞானசௌந்தரி சரித்ரம்
12—தாரா சசாங்க சரித்ரம்
13—நளதமயந்தி சரித்ரம்.

859067

**இவை கூடிய விரைவில் வெளிவரும்.**

**தேவைக்கு ஆர்டர் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள்.**

**மு. கிருஷ்ண பிள்ளை,**

ஏஜண்ட், பி நா. சிதம்பர முதலியார் அண்டு கோ,
பிரிண்டர்ஸ், பப்ளிஷர்ஸ் அண்ட் புக்ஸெல்லர்ஸ்,
மதுரை.

உ

முருகவேள்துணை.

திருச்சிற்றம்பலம்.

---

# சொக்கலிங்கப் பெருமானது திருவிளையாடற்

# காவடிச்சிந்து திருப்புகழ்

## இரண்டாம்பாகம்.

---

### 36—முப்பத்தாருவது

### இரசவாதஞ்செய்த திருவிளையாடல்

### பாடல்

ஒதிரு நல்லூர்வளர்—என்றமெட்டு

கண்ணிகள்

பூவணத்தெழுந்தருள்சர்வேசன் றன்னை
போற்றிசெய்துபக்திவிசுவாசம் கொண்டு
பொன்னனையாள்பணிவிடையுல்லாச மாகப்

பூசைசெய்து அடியாருக்கு
ஆசையுடன்தொண்டுசெய்யும்

பூவையவள்பக்திசோதித்திடவே சொக்கர்
மேவியவளன்புபதித்திடவே

சித்தருருவாயெழுந்தநாடி அன்று
சிவனடியார்தன்னுடனேகூடி அந்தச்
சேயிழைசெய்தொண்டுக்குறவாடி மெத்தச்

சீரதாயிரச வாதம்
நேரிழைமுன் செய்தருளி

சேவையதுதந்திடவப்போது இவள்
ஆவலுடன்சிந்தைமறவாது

பஞ்சலோகசுயம்பாகவார்த்து அதை
பண்புடனேகண்குளிரப்பார்த்து மிகப்
பரவசமாய்க்கவலையெல்லாந்தீர்த்து சதா

பக்ஷமாயுகந்து ரத
உற்சவம்நடத்தி வந்து

பண்டுசெய்தபாவமெல்லாம்தீர்ந்தாள் நீல
கண்டனருள்பெற்றுமுத்திசேர்ந்தாள்

---

## 37—முப்பத்தேழாவது

## சோழனைமடுவீட்டிய திருவிளையாடல்

## பாடல்

### பியாரிதோரிபியாரிஜான்-என்றமெட்டு

கண்ணிகள்

பதாதியோடுஆயிரம் பரிதனக்கொருசேவகன்
பார்புகழ்சோழனும் போருக்கெழுந்திட
பாண்டியன் மிகவாடியே
வேண்டிச்சொக் கரைநாடியே

தொழுதுமுறையேசெய்திட சோமசுந்தரசூர்ந்துமே
தில்லபமாகவே வல்லமர்செய்யவே
சோழன்மடுவில் வீழ்ந்தனன்
தாழ்வில்லாத்தென்னன் வாழ்ந்தனன்

---

## 38—முப்பத்தெட்டாவது

## உலவாக்கோட்டையருளிய திருவிளையாடல்

## பாடல்

### மார்க்கத்திற்கண்டகனி—என்றமெட்டு

கண்ணிகள்

வேளாளமரபில்வந்த பக்தனென்போன்
மெய்யடியார்க்குநல்லன் சொக்கர்
தாளிணைபூசித்து கற்புத்தார்ம்மசீலை
தையலுக்குகந்த செல்லன்

சந்ததம்வேளாண்மை செய்து அரைக்கொண்டு
தர்மஞ்செய்துவருவான் சோம
சுந்தரர்தன்னையேதியானஞ் செய்தெப்போதும்
தொழுதுபக்தி புரிவான்

கர்த்தன்சோதனையால் விளைவில்லாதிருக்கக்
கடன்வாங்கிச்செலவுசெய்தான் இன்னும்
மெத்தவேசோதிக்கக் கடனில்லையென்றிட
விமலன்பதத்தி லுய்தான்

பக்தனுக்கிரங்கியுலவாக் கோட்டையதை
பரமன்தந்தருள்செய்ய அவன்
சித்தம்போல்பூசித்துச் செலவுசெய்தோங்கினன்
தேவர்பூமாரி பெய்ய

---

## 39—முப்பத்தொன்பதாவது
## மாமனாகவந்து வழக்குரைத்த திருவிளையாடல்
## பாடல்
### வேலனேயிந்தவீணனை—என்றமெட்டு

பல்லவி

மாமன்போல்வந்து வழக்குரைத்தாதரித்தார்
மகிழ்வாகவே தகைசேர்ந்துள்ள
மதுரைவளர் பரமன்மிக (மா)

அநுபல்லவி

க்ஷேமமிருந்த தனபதி தங்கையின்
சேயன்றனக் கினிதாகவே
தாய்மீனம் பிகைநாயகர் (மா)

சரணம்

தனபதிதங்கைசேய் தனக்கெழில்செல்வத்தை
தந்துமேதுறவடைந் தனர்மிகுத்தே
இனமுதலோரிவா ளிடம்வழக்கழித்தே
இனியசெல்வ முழுதும்பெற்று
தனியேதயங்கிடச் செய்ததால் (மா)

வணிகர்குலச்சிறுவனும் தாயும்வெம்பியே
மாமதுரைதன்னில் மயக்கித்ததும்பியே
பிணியறவேகூடற் பெருமானைநம்பியே
பிரியமுடன் முறையேசெய்ய
உரியதன பதியாகிய (மா)

---

## 40-நாற்பதாவது

### வரகுணனுக்கு சிவலோகங் காட்டிய திருவிளையாடல்

## பாடல்

### நேமமாய்ப்பணியண்ணுமலைக்குதவு-என்றமெட்டு

கண்ணிகள்

வேண்டிவரகுண பாண்டியன்மிகுந்த
வேட்டையே யாடவேதிருநாட்டையே நீங்கி
வேரோடாடியே நாடுதேடிப்பரி
மீதினில் வரும் போதினில்

ஆண்டவன்செயலா லாண்டகைபரியின்காற்
றீண்டிட மறையோன்மிகமாண்டிட ப்ரம்ம
ஹத்தியேதொடர்ந்து மெத்தவேவருந்தி
அமலனை கூடல் விமலனை

நேயமாய்த்துதித்து ஆயிரத்தெண்வலஞ்
செய்திட சொக்கருள்பெய்திட வந்த
நேரியனைவென்று சீர்விடைமருதூரில்
நேர்ந்துமே மிகச் சார்ந்துமே

தீயாம்ப்ரம்மஹத்தி தூயமீனவனை
நீங்கியே தினமும்பக்தி யோங்கியே நாடிச்
சிவலோகம்காணவே அவனியில்வேண்டிடத்
தென்பதாய் மன தன்பதாய்

வாகுடனேசிவ லோகத்தைவரச்செய்
தோர்ந்தனர் சொக்கர்கருணைகூர்ந்தனர் திரு
மாலயன்உம்பர்கள் சூழவிருப்பதை
வாசமாய் வெகு நேசமாய்

ஆகமத்தின்படி யாகவேதுதித்துப்
பாடியே மீனவனுங்கொண்டாடியே அர
சாண்டுமிகப்பக்தி பூண்டுபேரின்பத்தில்
ஆழ்ந்தனன் மேவி வாழ்ந்தனன்

## 41-நாற்பத்தோராவது விறகுவிற்ற திருவிளையாடல்

### பாடல்

பாலாபிஷேகப்பழனி-என்றமெட்டு

கண்ணிகள்

யாழ்ப்பாணனாகிய ஏமநாதன்வந்து
யாழிசைப்பதில் வல்லபனென்று
தாழ்வில்லாதுரைக்கப் பாண்டியனறிந்து
தன்னுடபாணனை நோக்கியன்று

### தொகைரா

தாழாமல்யாழினை பாடியேஜெயிப்பாயெனவே
பாழானதுன்பமேகொண்டு சொக்கேசரைப்பணிந்துமுறையிடவே

### பாடல்

பரமனுமகிழ்வுடன் கிழவடிவாகி
விறகுசுமந்தேம நாதன்முன்னேகி
தாணிபுகழவே யாழிணைக்கொண்டு
சாதாரிபாட யாழ்பாணன்கண்டு

### தொகைரா

நீதமாயாரென விமலனுஞ்சிறந்திடவே
நீதில்லாபாணபக்தனின் சிஷனென்றுரைத்திடவே

### பாடல்

திகிலுடன்யாழ் பாணன்ஓடினனன்று
பகவானுங்கனவதிற் பக்தன்முன்சென்று
பகைவன்முன்யாழிணை சாதாரிபாட
பங்கமுற்றோடினா னென்றூர்கொண்டாட

### தொகைரா

அங்கமுங்குளிரவேபாண பக்தனெழுந்திடரேகியே
அங்கயற்கண்ணியின்நாதனைத் தொழுதுபரவசமாகியே

### பாடல்

அரசனை அணுகியே விபரமாய்ச்சொல்லத்
தருணமேபாணனைத் தழுவியேநல்ல

சரணஞ்செய்தேற்றியே சொக்கரின்மீது
சங்கீதம்பாடென்ருன் தனதாயப்போது

---

## 42—நாற்பத்திரண்டாவது
## திருமுகங்கொடுத்த திருவிளையாடல்

## பாடல்

### பாதிராத்திரிவேளையில்—என்றமெட்டு

கண்ணிகள்

பாணனுமிகத் தீனரைக்கார்க்கும்
பரமனைத்தினம் பாடி நல்ல
வரமேகொண் டுறவாடி சதா
பஜனைசெய்து கொண்டாடி மிகப்
பற்றறமேவி நற்றுணையான
பக்தியேகொண்டு நாடி

மானிலந்தனில் வருமியாகியே
வாடிடச்சொக்கர் கூர்ந்து செல்வந்
தேடியேவந்து சார்ந்து தர
மகிழ்ந்துவாழ்ந் தனன்நேர்ந்து போற்றி
வந்திடும்நாளில் சந்த்ரசேகர
வள்ளல்சோதிக் கத்தாழ்ந்து

புன்மையேகொண்டு தென்மதுரேசன்
பொன்னடிமற வாது தொழ
உன்னதக்கனவில் மீது தோன்றிப்
புவிதனிற்றீங்கண் டாது என்றும்
புகழுவேதிருமுக மெழுதியே
பூர்த்தியாய்த் தந்தப்போது

தன்மையாய்சேரன்தன்முன்னேயிதைத்
தந்துசெல்வ மனேகம் பெற்று
சிந்தையின்துயர் போக க்ஷேமஞ்
சார்ந்திடுமென் றன்பாக கூறிச்
சங்கரர்செல்லத் துங்கபாணனும்
சுதியெழுந் தினிதாக

சேரமானிடம் நேரத்திற்சென்று
திருமுகந்தன்னைத் தந்து மேவப்
பரவசமா யுகந்து ஈசன்
செப்பியபடி மிகுந்து அவன்
செல்வமீய்ந்திடப் பெற்றுமேபாணன்
சிறந்துமேமதுரை வந்து

ஆரணம்புகழ் நாரணன் தங்கை
அம்பிகைமகிழ் பூமன் றன்னை
நம்பியேயதி நேம மாக
அனுதினம்மற வாமல் துதித்
தாடினான் கீதம் பாடினான்பக்தி
அணுகியேதீங் கில்லாமல்

## 43—நாற்பத்துமூன்றுவது
## பலகையிட்ட திருவிளையாடல்
## பாடல்
### ஆயேநாதாபீரஸ்காந்தி—என்றமெட்டு

கண்ணிகள்

பாணபக்தன்சொக்கர் தன்னைப்பாடியாடியே
வேணபக்திகொண்டு சதாமேன்மைகூடியே

நந்திபின்போய்பாடி வருநாளில்மிகுந்து
விந்தையதாய்மழைபொழியமெய்யெல்லாந்தளர்ந்து

என்புருகப்பாடிடவே ஈசனுங்கூர்ந்து
பண்புடனேபக்தனுக்கு பலகையையீய்ந்து

பக்தனேநீயிதிலிருந்து பாடுவாயென்று
அத்தனருள்செய்திடவே அன்பதாயன்று

பலகைமீதிலிருந்திசைத்து பரமனைப்பாடி
நலமுறவேயில்லஞ்சென்றான் ஞானத்தைநாடி

# 44—நாற்பத்துநான்காவது
# இசைவாதுவென்ற திருவிளையாடல்
## பாடல்
### மார்கழிமாதம்—என்றமெட்டு

கண்ணிகள்

பாண்டியன்தனதுமனைவி சொல்லாற்பாணன்
பத்தினியுடன்வாது செய்ய
வேண்டியேவிறலியை வரவழைத்திவளுடன்
வீணையிசைத்திடென்ன கூறய

பாணன்மனைவியவளுட னெதிர்த்துவீணை
பரமன்றனைத்துதித்துப் பாட
மீனனிவளையிகழ்ந்தவளை மிகப்புகழ்ந்து
வேணபரிசளித்தான் வாட

பத்திரன்மனைவி முறைசெய்துதுதிக்க
பரமனுமசரீரி யாகச்
சித்தமகிழ்ந்துரைத்த திடத்தையுணர்ந்துஇவள்
தீவினைமுழுதகன் றேக

சொக்கர்சன்னிதானத்திற் பாடுவோமென்று
சொல்லவேதென்னன் மிகவுகந்து
மிக்கதோர்விறலியோ டிவளையுமழைத்தேகி
வீணைவாசிக்கச்செய்தான் மகிழ்ந்து

க்ற்புள்ளவள்யாழிசைத்துப் பரமனைப்பாடக்
கர்த்தனருளினால் மன்னன்
விற்பன்னபாணபக்தன் மனைவியைப்புகழ்ந்தே
மிகப்பரிசளித்தான் மின்ன

ஈழநாட்டுமங்கை கழுத்திலிவளையேற்ற
எண்ணருஞ்சபையார் மகிழ்ந்தார்
யாழ்ப்பாணனைவென்றோன்வித்வானைப்போலிருந்து
அற்புதமற்புதமென்றே மறைந்தான்

## 45—நாற்பத்தைந்தாவது
## பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த திருவிளையாடல்
## பாடல்
### மானைப்பிடியே வனக்கிள்ளையே—என்றமெட்டு

கண்ணிகள்.

தேவகுருவிட்டசாபததால் வேளாளன்
செயர்களானபன் னிருவருமே
பூவகத்திலரசேனத்தின் குட்டியாய்ப்
போயுதிக்கமீனன் வேடருமே

வேட்டைகளாடியே தாய்தந்தைப்பன்றியை
வேன்றிடக்குட்டிகள் தானலைந்து
வாட்டமுறுமவேளை மீனுகூதிசொக்கரும்
வந்துநோக்கியருள் தான்புரிந்து

சாலவேஐயனும் தாய்ப்பன்றியாகியே
சார்ந்துமேகுட்டி களுக்குகந்து
பாலதுகொடுத்து மானிடவுடலும்
பன்றிமுகமாக்கி யேமகிழ்ந்து

வாசமாயருளிச் சென்றபின்பன்றிகள்
மாண்டவிடம்பன்றி மலையென்று
நேசமாயெங்கும் வழங்கமுனிவர்கள்
நேர்ந்துதவவேசெய் தார்களென்றும்

---

## 46—நாற்பத்தாறுவது
## பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய திருவிளையாடல்
## பாடல்
### என்னருமைநல்லதங்காள்-என்றமெட்டு

கண்ணிகள்

கண்ணுதல்சொக் கேசர்தென்னன்
கனவினிற்சார்ந்து மேவித்
தனதருள்நேர்ந்து கூடற்
காவலனேகேட்பாயென்று கருணையேகூர்ந்து
அன்புடன் கருணையேகூர்ந்து

பன்றிமுகவீரர்களைப்பரிவுடன்மிகுந்து உந்தன்
அருகழைத்துகந்து வெகு
பக்ஷமுடன் அமைச்சராக்கிப் பாதுகாமகிழ்ந்து
அவர்களைப்பாதுகார் மகிழ்ந்து

என்றருளிச்சென்றபின்புஇருதயங்களித்தே தன
தருகினிலழைத்தே கூடல்
இறைவன்பன்றிமுகவர்களை எழில்சபையகத்தே
சொந்தமாய் எழில்சபையகத்தே

மந்திரிகளாகவைத்துமகிழ்ந்துபசரித்தான் செங்கோல்
மிகுந்துஆதரித்தான் சொக்கர்
மலரடியைத்துதித்தினிதாய் மனதிலுச்சரித்தான்
சதாகாலம் மனதிலுச்சரித்தான்

---

## 47—நாற்பத்தேழாவது
## கரிக்குருவிக்கு உபதேசித்த திருவிளையாடல்
## பாடல்
### பூமிமெச்சிடுமண்ணுமலை-என்றமெட்டு
கண்ணிகள்

பாவத்தாலொருவன் பூவிற்கரிக்குருவி
யாகவே தோன்றி நோகவே இழிவாகவே மற்ற
பக்ஷிகள்வாதிக்க அச்சங்கொண்டுபதை
பதைத்துமே பல விதத்துமே

மேவியேயங்கங்கு தாவிப்பறந்தோடி
வாடியே கூடல்நாடியே வந்துகூடியே ஒரு
விருக்ஷத்தினிழலிற் கருத்துடன்பிறருக்கு
வேதிய ரன்பா யோதிய

ஞானமார்க்கங்கேட்டு வீனமொழிந்தன்று
நேசமாய் விசுவாசமாய் மந்தஹாசமாய் சொக்கர்
நாமங்கூறியேபொற் ருமரையில்மிகஸ்
நானமே செய்து மௌனமே

ஆனவழியுடன் மீனன்பிரான்சன்னி
தானமே சென்றுதியானமே செய்யத்தீனமே மாற்றி
யருள்செய்சொக்கர் கரிக்குருவிதனையழைத்
தன்பதாய் வெகு தென்பதாய்

மாதுமீனாக்ஷிச மேதராய்க்கருணை
செய்துமே அருள்பெய்துமே வினைகொய்தும்ம பக்ஷி
வாசமுறஉப தேசமேசெய்தனர்
மகிழவே எங்கும் புகழவே

கோதில்லாதபக்ஷி நீசவரம்பெற்று
நேர்த்தியாய் மிகப்பூர்த்தியாய் என்றுஞ்சீர்த்தியாய் அதின்
குலமெல்லாஞ்சிறந்து நலமுறவேகளி
கூர்ந்தது அன்பாய் வாழ்ந்தது

---

## 48-நாற்பத்தெட்டாவது

## நாரைக்கு முத்தி கொடுத்த திருவிளையாடல்

### பாடல்

### பஞ்சவர்ன்னமே-என்றமெட்டு

கண்ணிகள்

தென்றிசையிலொரு நாரைதடாகத்திற்
சிறந்திடுமச்சங் களைத்தானருந்தி
என்றுமேசுகித்து வாழ்ந்திடச்சின்னாள்மழை
இல்லாதொழியப் பசியால்வருந்தி

சத்தியமுனியின் ஆசிரமடைந்து
சார்ந்ததடாகந் தன்னிற்பவமறுத்து
நத்தியேகுளிக்கு முனிவர்களைகண்டு
நாரைபசியெல்லாம் தான்வெறுத்து

சொக்கரைவலம்வந்து துதித்திடும்நாளதிற்
றூயபொற்றாமரை யின்மீனமதை
மிக்கதோர்பசியாற் புசிக்கவிரும்பியே
மெய்தளர்ந்துதெளிந்து ஞானமதை

சிந்தையிலுணர்ந்து தெரிசித்துவருகையில்
தீனரைக்காக்குஞ் சொக்கர்தான்மகிழ்ந்து
விந்தையாய்ச்சேவை தந்தெவ்வரமுனக்கு
விரும்புவாயென்றிட வேதானுகந்து

பொற்றாமரைதனில் மீனமுதற்புழுப்
பூச்சியில்லாதிருக்க வேணுமென்றும்

நற்றுணையாகவே முத்திதருவாயென்றும்
நாரைவிரும்பிட வேபரமனென்று

அன்புடனருள்செய்து முத்தியைத்தந்திட
அதுமுதலிதுவரை பொற்றாமரையில்
தென்பதாய்மீனமுதற் பூச்சியில்லாதொழிந்து
சிறந்துவழங்கிடு தேயித்தரையில்

## 49-நாற்பத்தொன்பதாவது
## திருவாலவாயான் திருவிளையாடல்
## பாடல்

செந்தின்மாநகர்வாழ்கந்தனுதை-என்றமெட்டு

கண்ணிகள்

பின்னோர்பிரளயந் தன்னிற்கடற்பொங்கிப்
பிரபஞ்சமகிழ்ந்து மே போகப்
பிறகுபார்தனைந்து மே கூடற்
பிதனுருவந்து மே அருள்
பெய்யத்தேவாலயம் வையகமெங்கிலும்
பேராகச்சிறந்து மே

யானைப்சுநாகம் ஏனமிடபமே
ரானதுவேவாங்கி யே காண
மீனன்செங்கோல்தாங்கி யே அர
சாண்டுவினைநீங்கி யே எல்லை
யதனைக்காண்மியென மதனைக்காய்ந்தோன்மீது
அன்புபூண்டு நோங்கியே

கோரிமுறைசெய்ய நாரிபாகனருள்
கூர்ந்துமனதன்ப தாய்ப் பூண்ட
பாந்தள் தன்னைத்தென்பதாய் ஏவிக்
கூடல்தானீதென்ப தாய்க் காட்டிக்
குறிப்பிடுவாயென்ன விருப்பமுள்ளதென்னன்
குளிர்ந்திடவேமுன்ப தாய்

என்றும்புகழ்பரங் குன்றமும்ஏடகம்
இடபமலைபூவ ணம் தன்னை
திடமுடனேயத்தி னம் நாகம்
எழுந்தினிதாய்த்தக்ஷ ணம் வளைந்

திடைவிடாதுசற்றி யடைவுடன்காட்டியே
எல்லைதானிது வென

ஆலவாயெனவே ஞாலமெங்குமோங்கி
அந்தார்கள் நாடியே மீனன்
சிந்தித்தன்பு கூடியே கூடல்
ஐயனைக்கொண் டாடியே புவி
யாண்டுசெங்கோலது நீண்டுகீர்த்தியானன்
ஆரணங்கள் பாடியே

---

## 50-ஐம்பதாவது

### சுந்தரப்பேரம்பெய்த திருவிளையாடல்

### பாடல்

வாலைவயதாகிமதனாகி-என்றமெட்டு

கண்ணிகள்

சேனையுடன்சோழன்சம ராடவரவேயயர்ந்து
மீனன்வம்ஸசேகரனும் போற்றிமுறையிடுசெய்ய
தீதில்லாதசேவைதந்து வேடவுருவாயெழுந்தே
புனனூடன்

ஈனமுறவேசுந்தரப்பேரம் பெய்துவாட்டிவென்று
வானோன்கலிமாற்றிவித்த வீசனருளேபுரிய
ஏழைகளைப்பாதுகார்த்து ராஜரீகமேபுரிந்தான்
மகிழ்வாக

---

## 51-ஐம்பத்தோராவது 85906

### சங்கப்பலகைதந்த திருவிளையாடல்

### பாடல்

பரமானந்தமெய்ப்பா-என்றமெட்டு

பல்லவி

மதுராபுரியில்வாழ் சொக்கேசர் மகிமையறிந்து
மதுராபுரியில்வாழ் சொக்கேசர்

அநுபல்லவி

சதுர்மறைபரவிடுந் தனிமுகற்சோதி
சஞ்சலமகற்றியே தளைத்திடும்நீதி
பொதுவினிற்றிரு நடம்புரிந்தஅனாதி
புனிதநற்காக்ஷிதந்து புகழ்வுறுக்யாதி (மது)

சரணம்

தாணிபுகழ்வேதன்சபித்து விடவேவாணி
சரீரமாகியமுதலெழுத்து ஐம்பத்தொன்றுள்ளே
சார்ந்தஆகாரமுதலாகார மிருதுவாகிய
நேர்ந்தநாற்பத்தெட்டெழுத்துப்பூர தாகவேபூவில்
தன்மைமிகுந்தே புலவர்களாகப்பிறந்து
தேசங்கள்சுற்றி
பண்முதற்பாக்கள்உகந்து இயற்றிச்சிறந்து
பரிசுபெற்று
தமிழதுபரவிடும் உமையவள்தடாதகை
தனிநகரதனையேநாடி
வரும்வழியில்
அமரர்முனிவர்தொழும்விமலர்புலவராகி
அணுகியவர்களைக்கொண்டாடி
அழைத்துவந்தே
சாதுசர்ஜனர்மீதுஅன்புறும்நாதர்சொக்கரின்
நீதபொற்பதம்போற்றச்
செய்துமேசென்றார்
சங்கங்கள்வாழ்வதர்க்கிங்கிதமண்டபம்
தன்மையதாயமைத்தேற்ற
வசித்தாரன்று
தலைமைப்புலவராகிச் சங்கார்சங்கப்
பலகையளித்தாரொண் மர்பரிந்துதுலங்க
புலவர்களுக்குமுதற் புலவரென்றிலங்க
நலமுறவேயிருந்தார் உலகங்கள்வழங்க (மது)

## 52-ஐம்பத்திரண்டாவது

## தருமிக்குப் போற்கிழியளித்த திருவிளையாட்டல்

### பாடல்

### கருவிலுருவாகிவந்து-என்றமெட்டு

கண்ணிகள்

இறைவனிளவேனில்வெப்பால் உரியமனையோடுவந்து
இனியமலர்ச்சோலைசென்று மகிழ்வாக

உலவிவரும்போதுஅன்று தலைவிகுழல்வாசமிக்க
உளமும்களிகூர்ந்திலங்கக் கமழ்வீசும்

மகிமையதினால்வியந்து புகழுங்கவிவாணர்வந்து
மனமதனிலேஐயுற்ற விதமேநோக்கி

தனதாய்க்கவிபாடலுற்றோர் கனமுடன்பொன்னாயிரத்தை
ததியேபெறுவீர்களென்று கிழிதூக்க

உலகமதுமேவுசங்கப் புலவரறியாதிருக்க
ஒருவர்கதியேதுமில்லா மறையோனும்

தருமியென்னும்பரமமுள்ளோன் கருணைவடிவானசொக்கர்
தனதுமலர்ப்பாதந்தன்னைத் துதித்தாட

அரனும்கவிதான்வரைந்து தரவேயினிதாகப்பெற்று
அறியசபைமீதடைந்து கவிபாட

செழியோன்மகிழ்வாயுகந்து கிழியதின்பொன்னாயிரததை
திடமாய்த்தரவேதான்பெற்று நடந்தேக

மறையோன்சொன்னபாடல்தன்னிற் குறையெனநற்கீரர்பொன்னை
வழியிலெதிர்த்தேகவர்ந்து விடவேதான்

கவலையுடன்போற்றச்சம்பு கவிஞருருவாகியன்று
கருதியெதிராகிச்சங்கப் புலவோர்கள்

தலைவரென்னுங்கீரர்முன்னே பலவிதமன்றுடிக்கண்ணின்
சைகையதினுலுரைத்தும் தடுத்தோத

மதுரைவளரீசனன்று நுதல்விழியால்நோக்கமெத்த
மனதுகலங்கதிருந்தா நற்கீரர்

---

## 53-ஐம்பத்துமூன்றாவது

## கீரனைக் கரையேற்றிய திருவிளையாடல்

### பாடல்

### பொன்னார்மேனியனே-என்றமெட்டு

கண்ணிகள்.

கங்காதரர் சொக்கர் நெற்றிக் கண்ணினுற் நோக்கிட வே
எங்கும் புகழுகின்ற கீரன் இனியபொற் ருமரையி ல்
அங்கம் நொந்துமூன்று மூழ்கி அதிகமாய்த் துன்பமு ற
சங்கப்புலவ ரெல்லாம் மிகத் தாழ்ந்து முறையிட வே

அத்தன்சோம சுந்தரேசன் அம்பிகை யோடெழுந் து
சித்த மகிழ்வுறவே கூர்ந்து செங்கையாற் கரையேற் றி
கத்த னுகவளர் திருக் காளத்தி யப்பனை யே
நத்திப் பாடெனவே மிகநற் கீரர்பக்தி யுட ன்

வெண்பா புகழந்தாதி பாடி விமலனைப் போற்றி செய் தே
துன்பமுழு தகன்று கீரர் தூயஞானத் தில்மூழ் கி
நண்பன் தருமிக் கன்று பொன்னை நாடித்தந் துறவா டி
அன்புடன் சங்கஞ் சேர்ந்தே புலவர் யாவரும் வாழ்ந் திருந்தார்

---

## 54-ஐம்பத்துநான்காவது

## கீரனுக்கிலக்கண முபதேசித்த திருவிளையாடல்

### பாடல்

### செந்தாழம்பூவுந்தேன்கமழும்-என்றமெட்டு

கண்ணிகள்

பந்தபாசந் தீர்க்குஞ் சொக்கரைப் பணிந்துமே நற்கீரரும்
சந்ததம்பொற்றுமரை சார்ந்துநீராடிக்குறை
தனையொழித்துமே மனங்களித்துமே
சகுதிதா னந்தனைப்
பக்ஷமாய்ப் பாடிட (ப)

இம்மை தனில்நன்மை யேதரு மிறைவ னருள் கூர்ந்துமே
தன்மையாயகத்தியர் தனையழைத்துநன்னயம்
ததிதுலங்கிடப் பதிவழங்கிட
தக்க புகழ் பெற
நற்கீரர்க் குகநதே (ப)

எண்டிசை மேவு மியற் றமிழ் இலக்கண முபதேசமே
அண்டிப்புரிவீரென அகத்தியருமத்தினம்
அகமகிழ்ந்துமே மிகப்பகர்ந்துமே
ஆசிரஞ்சென்றனர்
நேசமா யப்போது (ப)

---

## 55-ஐம்பத்தைந்தாவது

## சங்கத்தார் கலகந்தீர்த்த திருவிளையாடல்

### பாடல்

சுந்தரப்யாரிமைக்கோ-என்றமெட்டு

கண்ணிகள்.

சங்கப்புலவரெல்லாம் தனித்தனிபாடல்பாடி
தங்கள்தங்கள்பாடலே தான்புகழ்ந்தார்கள்நாடி

மெத்தவேகலகமாகி விமலர்சன்னிதிக்கேகி
பக்தியாய்முறைசெய்யப் பரமன்புலவராகி

உருத்திரசருமனென வூமன்முன்போயித்தினம்
கருத்துடன்பாடினூற் கலகந்தீருமென்றனர்

நண்ணியேஊமன்முன்னே நாடியேசென்றுபாட
கண்ணுதலருளாலே கலகமுமகன்றோட

நற்கீரர்கபிலர்பரணர் நவிலும்பாடலைக்கூர்ந்து
மிக்கவே தலையசைத்து விரும்பிமகிழவேர்ந்து

புலவர்கள்கருவம்நீங்கிப் போற்றினூருமன்றன்னே
நலமுறவேகொண்டாடி நன்குணர்ந்தார்முன்னே

---

## 56-ஐம்பத்தாறுவது

## இடைக்காடன் பிணக்குத்தீர்த்த திருவிளையாடல்

### பாடல்

கண்மணியேபெண்மணியே—என்றமெட்டு

கண்ணிகள்

திங்கள்மரபின்குலேசன் செந்தமிழ்ப்பாடிச்
சிறந்திடக் செந்தமிழ்ப்பாடி

சங்கப்பலகையின்மீது சார்ந்திடுநாளில்
தன்மையுடன் சார்ந்திடுபுளில்

எண்ணறியகவிகள்பாடி யிடைக்காடனும்
இன்பமாய் இடைக்காடனும
மன்னன்முன்னேன்பாட அவமதிக்கவப்போது
மன்னனவ ! மதிக்கவப்போது

மெத்தநொந்துஇடைக்காடன் விமலனைப்போற்ற
வினைதீர்க்கும் விமலனைப்போற்ற
அத்தனருள்கூர்ந்துவைகையாற்றின்தென்கரையே
ஆலவாய் ஆற்றின்தென்கரையே

பழையசொக்கநாதரென்றே பரிவுடனெழுந்தே
பரமனும் பரிவுடனெழுந்தே
பிழையில்லாமலிடைக்காடன் பிணக்கந்தீர்த்தருள
பித்தனும் பிணக்கந்தீர்த்தருள

செருக்கடைந்தபாண்டியனும் சிந்தைபதறியே
செய்பிழையாற் சிந்தைபதறியே
பொறுக்கவேணுமென்றுபோற்றப் புனிதஅருள்செய்தார்
பூதநாதர் புனிதஅருள்செய்தார்

---

## 57—ஐம்பத்தேழாவது
## வலைவீசின திருவிளையாடல்
## பாடல்
### அம்பலத்தாசேயருமருந்தே-என்றமெட்டு

கண்ணிகள்.

அம்பிகைதனக்கு ரகசியமாய்
அணுகியேபிரணவம் உபதேசிக்க

சம்புசொக்கேசர் இவளுணராத
தன்மையையறிந்து மிகச்சபிக்க

ஐங்கர்சண்முக ரிதையுணர்ந்து
அறியாமல்வேதங்கள் தனையெடுத்தே
பொங்கமுடனே பெருவாரியிற்போட
புனிதமாநந்திமையுங் கடுகடுத்தே

வேலனைங்கா ணிங்குவந்திடவே
மெத்தவேஉகந்து இருந்ததாலே
சாலவேசுறாமீ னுருவாயெனவே
சபித்திடக்கடல் சூழ்பூமிமேலே

கிழைச்சமுத்திரக் கரையருகே
கௌரிசிசுவா யிருந்தழுதிடவே
தாழாதேதாங்கும் பரதவராஜன்
தன்மையாயெடுத்து வளர்த்திடவே

நந்தியுஞ்சுறாமீ னாயுதித்து
நஷ்டமேசெய்திட பாதவனும்
தந்திரமாயதைப் பிடிக்கஏலாமற்
சாற்றினன்சுயவரம் புகழ்ந்தவனும்

தீரமாய்ச்சுறாமீனைப் பிடிப்பவர்க்கு
செல்வியைத்தருவே னென்றுரைத்திடவே
ஆரணம்பரவுசொக்கே சருமுகந்து
அழகியபரதவன் போற்சிறந்திடவே

வலைவீசிசுறாமீனைப் பிடித்திடவே
மட்டில்லாதபரதவ வரசனுமே
நலமுறத்தன்புதல்வி தனைக்கொடுக்க
நன்மனம்புரிந்தனர் பரமனுமே

உன்னதமாயருள் புரிந்தினிதாய்
உத்தரகோசமங்கை தலத்தில்வந்து
நன்னயக்காக்ஷியைத் தந்துகூடல்
நாடியேவந்துவந்தார் மிகச்சிறந்து

---

## 58—ஐம்பத்தெட்டாவது
## திருவாதவூரடிகளுக்குபதேசித்த திருவிளையாடல்
## பாடல்
### ஆவோஹாவோசவாரி-என்றமெட்டு

பல்லவி

திருவாதவூரடிகளுக்குபதேசம்—செய்தார்
செல்விமீனாக்ஷிமகிழ்வுறுநேசர்

அநுபல்லவி

அரிமர்த்தனனுத்தரவால் அன்பாயுகந்து
பரிகள்வாங்கவந்தபோது பரமனுமகிழ்ந்து (தி)

சரணம்

திருப்பெருந்துறையில் மிக்கதெரிசனந்தந்து
விருப்பமாயாசாரியாகி மேன்மையாய்வந்து (தி)

புரவிக்காககொண்டுவந்த பொருளைநேசமாய்
பரமனாலயத்துக்கீய்ந்து பணியவாசமாய் (தி)

காணுதர்க்கரியசெம்மல் கருணையேகூர்ந்து
மாணிக்கவாசனெனப் பேர்வழங்கிடவோர்ந்து (தி)

தீர்க்கமாய்க்குதிரைகொண்டுவருவோமென்பதாய்ச்
சூக்குமபஞ்சாக்ஷரத்தை சோதியன்பதாய் (தி)

---

## 59-ஐம்பத்தொன்பதாவது

## நரிபரியாக்கிய திருவிளையாடல்

### பாடல்

சாரங்கந்தன்னிலோர்-என்றமெட்டு

கண்ணிகள்

மாணிக்கவாசகாசொன்ன வாயிதாவிற்றானே பரி
வரவில்லையென்றுமே யரிமர்த்தனன்முனிந்தானே
நாணமுறும்படி சஞ்சலஞ்செய்திட
நதியையணி பரமன்றன்னை
துதியேசெய் திடவேயன்று (மா)

ஆவணிமூலத்தில் நரிகளைப்பரிகளாக்கி வேத
மாகியபுரவிமீதெழுந் தருட்கண்ணோக்கி
தேவகணங்களை வீரர்களாக்கியே
தீரத்துட னேறிச்சிங்
காரத்துடன் சொக்கேசர் (ஆ)

வாதவூரர்தந்தபொருளுக்குக் குதிரைகள்நேராய் கொண்டு
வந்தோம்வந்தோம்மகாராஜனே நீயிதோபாராய்
கோதில்லாப்பரிகளைப் பெற்றுக்கொள்ளென்றுமே
கூடற்பதி யானுக்கெதிர்
நாடிப்பர மேசர்ததி (வா)

மாசில்லாப்பரிகளை பாண்டியன்சம்மதமாக பெற்று
மட்டில்லாதானந்தங்கொண்டனன்குறைகள்போக
நேசித்தமாணிக்க வாசகர்மகிழ
நிமலோனருள் செய்துமிக
அமரர்தொழ வேசென்றனர் (மா)

## 60--அறுபதாவது

## பரிகரியாக்கிய திருவிளையாட்டல்

## பாடல்

### கண்ணாயிரம்படைத்த-என்றமெட்டு

கண்ணிகள்

பண்டுபுரமெரித்தே யண்டர்களைரக்ஷித்தோன்
பரிநரியாக்கிடப் புகழரிமர்த்தனன் கண்டுமே கண்கள்
பொறிகள்பறந்திட கடுகடுத்தேசினம் கொண்டுமே

அத்தன்றனைத்துதித்தே பக்திமிகும்வாதவூரர்
அடிகளைச்சஞ்சலஞ் செய்திடஅரனருள் கூர்ந்திட மெத்தக்
கடிகியேவைகையின் நதியதுபெருகி நேர்ந்திட

நன்னயஞ்சேர்மதுரை தன்னைய்ழித்திடவே
நகரினிலுள்ளவர் பாதவித்தங்கங்கு ஓடினர் ஒன்றும்
வகையில்லாதவரவர் மனதுகலங்கியே வாடினர்

மன்னனிதையறிந்து எண்ணுதுஎண்ணிமிக
வைகையடைத்திட சகலரையேவின ரன்பதாய் மெத்த
நையவேஅவரவர் கவலையோடேகினர் தென்பதாய்

## 61—அறுபத்தோராவது

## மண்சுமந்த திருவிளையாட்டல்

## நொண்டிச்சிந்து

மதியணிபரமனுமே அன்று
வைகைநதியில்வெள்ளம் பெருகச்செய்ய

மதுரையையழித்திடவே வர
மாநகர்வாசிகள் தகதளித்தார்
வாதவூரடிகள்தன்னை மிக
வருத்தஞ்செய்திருந்ததோர் தண்டலாளர்
பேதையுற்ருேடிஞர்கள் இந்த
பெருமோசந்தன்னைக்கண்டு பாண்டியனும்
அங்கமும்பதைபதைத்து வைகை
யாற்றிலணைகட்டுவீ ரெனவுரைத்தே
பங்காகப்பிரித்துவிட்டான் அவரவர்
பங்கின்படியேயணை கட்டிஞர்கள்
பிட்டுவிற்றிடும்வந்திக்கி பங்கு
பிரித்ததுமட்டுமணை கட்டவில்லை
மட்டில்லாதவள்மிருந்தே மெத்த
வருந்திக்கொண்டிருக்கையில் செழியபிரான்
அழுக்காடையரையிற்சுற்றி முடி
யதனிலேசும்மாடு வைத்தினிதாய்
ஒழுக்கமாய்க்கூடைதனைக் கவிழ்த்து
உரியதோர்திருத்தோளில் மண்வெட்டியை
தாங்கியேஎளியர்போல கூடற்
றனிநகர்வீதியின் வழியதாக
பாங்குள்ளதேகமதில் வேர்வை
பளபளெனமிக வொழுகிடவே
கூலியைத்தந்தெனது வேலை
கொள்வருண்டோவெனக் கூவிவர
சாலவேபிட்டுவிற்கும் மின்னுள்
சதியெழுந்திவந்து அழைத்திடவே
அன்பனருகிற்செல்ல வைகை
யாற்றிலென்பங்கணை கட்டெனவே
தென்பதாயிட்டவேலை மிகச்
செய்வேனென்றுகூவி யாதெனவே
என்னுடபிட்டுகளை உனக்
கிதமுறக்கூலியாய்த் தருவேனென்ருள்

அன்னையேஉதிர்ந்தபிட்டை பசி
யகலவேஉண்டு வேலைசெய்வனென்றார்
வந்தியுங்கொடுத்திடவே பிட்டை
வணக்கமாய்வாங்கி யுண்டுவைகைக்கரை
சிந்தையுமகிழச்சென்று நித்ரை
செய்துகொண்டிருந்திடப் பாண்டியனும்
தெரிந்துமேதேடிவந்து மிகச்
சினந்துமேபொற்பிரம் பாலடித்திடவே
பரிந்தெழுந்தொருகூடை மண்ணை
பண்புடனெடுத்தணை கட்டியுமே
கண்ணுதல்மறைந்துசென்றார் பூத
கணங்களும்அமரரும் வியப்புறவே
எண்ணருமண்டபிண்ட சராசரம்
எங்கிலும்வடுவது நிறைந்ததுவே
மீனவன்திகைத்துநிற்க ஆதி
விமலனும்அசரீரி கூறிடவே
ஞானமேபிறந்துமேவி சொக்க
நாதரினலயங் தனையடைந்து
வாதவூரடிகள் தன்னை மிக
வணங்கியேஉபசரித் தகமகிழ்ந்தே
நீதமாயரசியற்றி செங்கோல்
நெறிபிசகாமலே யாண்டிருந்தான் (ம)

---

## 62—அறுபத்திரண்டாவது

## பாண்டியன் சுரந்தீர்த்த திருவிளையாடல்

### பாடல்

சந்தனந்திமிர்ந்திலங்கும்—என்றமெட்டு

கண்ணிகள்

தன்னுடமதிகுலேந்து மன்னனனகூன்பாண்டியன்
சைவசமையத்தைநீக்கி சமணனை

நண்ணியேயரசியற்றி          திண்ணமாயவாள்மதத்தை
நம்பியேமகிழ்ந்திருக்கும்          குறையாலே

மட்டில்லாச்செழிப்பழிந்து          நஷ்டமேவிளைந்துழன்று
மன்னர்மன்னர்கள்நகைப்புக்          கிடமாக

பட்டணத்திலேசமணர்          கிட்டியேசைவமதத்திற்
பக்ஷமில்லாமலிருந்தான்          இறையோனும்

மங்கையர்க்கரசியன்று          சங்கார்சன்னிதானத்தில்
மன்றுடித்துதித்திலங்க          மழுவேந்தி

எங்கிலும்நிறைந்துகந்தோன்          துங்கபொற்பதந்துதிக்கும்
இத்தரைபுகழ்சம்மந்தர்          எழுந்தோங்கி

சித்தமகிழ்ந்துவாகீச          ருத்தமர்மடத்திருக்க
சிற்றறிவுள்ளசமணர்          அனல்மூட்ட

சுத்தசைவதன்மதத்தின்          மூத்தானதோர்சம்மந்தர்
துன்பஞ்செய்தவனிறைவ          னெனமேவி

செய்யனேதிருவாலவாய்          செய்யுளையுகந்துபாட
சின்னமதியுள்ளதொரு          செழியோன்றன்

மெய்யெல்லாஞ்சுரமிகுந்து          நையவேயவன்பத்தினி
மின்னுள்மங்கையர்க்கரசி          மதியூக

மந்திரிகுலச்சிறையார்          வந்துமேபணிந்தழைக்க
மன்னனைமுன்னெழுந்துசொக்கர்          திருநீறை

எந்தநாளுமேசிறந்த          மந்திரமாவதுநீறு
என்றுபாடக்கூனகன்று          சுரந்தீர்ந்தே

மீண்டிடசௌந்தரியபாண்டிய          னெனப்போர்கொண்டு
மேன்மையாய்ஞானசம்மந்தர்          தனைப்போற்றி

நீண்டபுகழ்தென்மதுரை          யாண்டிடச்சமணரெல்லாம்
நேரில்லாதுநாணமுற்று          அகன்றார்கள்

## 63—அறுபத்துமூன்ருவது

## சமணரைக் கழுவேற்றிய திருவிளையாடல்.

### பாடல்

### பாண்டியனீன்றமீனுக்ஷி-என்றமெட்டு

கண்ணிகள்

மீனவன்சபையதிற்சார்ந்து சமணுள்
மேவியேகூர்ந்து.
ஞானசம்பந்தர்தன்வேதம் பொய்யென்றே
நவின்ருர்வீண்வாதம்

### தொகைரா

விவரமேதெரியவேணுமென் றிறைவனும்கூறவே
கௌனிகர்சம்மதங்கொண்டு மேமனநதேறவே

### பாடல்

இருவர்களேடதை நேராய் வன்னியில்
இட்டனர்சீராய்
கருவமேகொண்ட சமணுள் ஏடது
கருகினதன்னுள்

### தொகைரா

ஆரணஞ்சேர்திருஞானசம்மந்த ரேடதுசிறந்திடவே
போருமைகொண்டின்னம் வாதுசமணுள்புரிந்திடவே

### பாடல்

அற்பசமணர்க ளேடும் சம்பந்தர்
ஆனவ ரேடும்
விற்பன்னவைகையிற் போட மாதவர்
விண்ணேர்கொண் டாட

### தொகைரா

சமணர்தளேடுகீழ்சமுத்திரம் போயடைந்ததே
விமலனரன்பர்ஏடுவைகையில் எதிர்த்துமேநடந்ததே

பாடல்

சமணர்களைக்கழுவி லேற்றி யேசைவ
சமையத்தைப் போற்றி
குமரவடிவு சம்மந்தர் தன்னையே
கொண்டாடி யந்த

தொகைரா

எடதுமேற்றிசையேகின் தறிந்தெல்லோரும்
நாடியேசெல்லவும்பரமனுந்தந்திட நற்சுகமிருந்துசேரும்

பாடல்

எடகமென்றேபே ரோங்கி நேர்ந்தது
இடாது நீங்கி
கூடல்மன்னன் சம்மந்தர் எல்லாரும்
கொண்டாடி மகிழ்ந்தார்

---

## 64—அறுபத்துநான்காவது
## வன்னியுங்கிணறு மிலிங்கமுமழைத்த திருவிளையாடல்
### பாடல்
### திருவுற்றிலகுகங்கை-என்றமெட்டு

கண்ணிகள்

மதுரைவணிகன்மாமன் புதல்விதனையழைத்தே
வரும்வழியதிற்சர்ப்பந் தீண்டிட அவன்
தருணமதிலிறந்து மாண்டிட அந்த
மாதுசமமந்தர் தன்னைவேண்டிட
தீதில்லாம லெழுப்பித்தந்தே
மனமகிழ்ந்திவர் கட்குநேசமாய் திரு
மணஞ்செய்திடவே விசுவாசமாய்

இனமுள்ளவரிணங்கா ரெனவேயம்மாதுரைக்க
எழில்சேர்சம்மந்தர் அருள்கூர்ந்துமே என்றும்

பழுதிராதெனமிக நேர்ந்துமே கூட
வீசனருளாலே வன்னியும்
கிணறும்லிங்கமு மாகுமென்றிட
இருவர்களும்மதுரை வந்தனர் வெகு
பிரியமுடன்சுகித் திருந்தனர்

வணிகன்றனக்கிரண்டு மனையாள்தனக்கினிதாய்
மகப்பேருண்டாகி வளர்ந்தோங்கினர் என்றும்
மிகப்புகழாகி வினைநீங்கினர் இரு
மாதரின்புகல் வர்கள்விளை
யாடியேயடித்துக் கொண்டனர்
மனதுசகிக்காமலே சின்னவள் முன்னாள்
தனையர்களையடிக்க அன்னவள்

பலவிதமாயிகழ்ந்து தளர்வுறவேபேசிடப்
பழுதில்லாதிளையவள் வாடியே சொக்கர்
கழல்பணிந்தேற்றினள் நாடியே மாவிற்
பன்னமுள்ளதோர் மங்கைக்காகவே
வன்னிகிணறு லிங்கம்வந்திடப்
பரமனருள்புரிந்தா ரன்றுமே இந்தத்
தரணிபருமகிழ்ந்தா ரென்றுமே

---

## வாழி—விருத்தம்.

---

திருமதுரை யதனில்வளர் செல்விமீனம்பிகை
சிவலிங்கமூர்த்திவாழி

தேவர்முதல் முனிவரர் மாலயனங்கரர்
சிவசுப்ரமண்யர்வாழி

அருமறைகள் முதலான திருஞான சம்பந்தர்
அப்பர்சுந்தரரும்வாழி
அன்புள்ள மாணிக்க வாசகர் நாயன்மார்
அனைவரும்வாழிவாழி
பெருமையுள பாண்டியர் யாவரும் வாழியருள்
பெற்றவரும்வாழிவாழி
பேர்பெறவே யிக்கதை யச்சிட் டவர்வாழி
பெரியநல்லோரும்வாழி
வருமையற விக்கதை படிப்பவர் கேட்பவர்
மகிழ்ந்துணர்வோரும்வாழி
வாசமுறவே ராஜவடிவேல் தமிழது
வாழிமுன்னோரும்வாழி

---

திருச்சிற்றம்பலம்.

---

சொக்கலிங்கப் பெருமானது

திருவிளையாடற்

# காவடிச்சிந்து திருப்புகழ்.

## இரண்டாம்பாகம்.

முற்றிற்று.

5906

---

சுபம். — சுபம்.

---

உ

# விளம்பரம்

ஸ்ரீமான் மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமா, ரர் மகா-ா-ா-ஸ்ரீ M. R. S. வேல்ச்சாமிக் கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வரஞ்சிதமெனும் பக்திரஸகீர்த்தனம்.

முதற்பாகம் ... ...விலை ரூ 0—5—0

இரண்டாம்பாகம் ... ... ,, 0—5—0

ரெட்டிநகர் வித்வான் இராமசாமிக் கவிராயர் அவர்க ளியற்றிய பக்திரஸகீதாமிர்தம் ... ... ,, 0—4—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரசன் சண்முகனுர் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரசக்கீர்த்தனம் .. ... ... 0—4—0

## அச்சில்! சீக்கிரம்வெளிவரும்!!

கன்னி ஜமீன் சரபம் மகா-ா-ா-ஸ்ரீ

உடுமலை முத்துசாமிக் கவிராயர் அவர்கள்

மாணாக்கர் R. K. பூமிபாலக தாஸ் இயற்றிய

பாசுரசேகர பக்திரஸகீதமெனும் பக்திரஸகீர்த்தனங்கள்

முதற்பாகம் ... ... ... விலை ரூ 0—5—0

இரண்டாம்பாகம் ... ... ,, 0—5—0

ஷையார் இயற்றிய அடியிற்கண்ட

13-டிராமா சரித்திரங்கள் நூதன வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றவை.

1—சதாரம் சரித்ரம்
2—வள்ளி சரித்ரம்
3—நல்லதங்காள் சரித்ரம்
4—கோவிலன் சரித்ரம்
5—லவிதாங்கி சரித்ரம்
6—சாரங்கதரன் சரித்ரம்
7—அல்லி சரித்ரம்
8—பாரிஜாத புஷ்ப ஹரணம்
9—சகுந்தலா சரித்ரம்
10-சத்தியவான்சாவித்ரி சரித்ரம்
11—ஞானசௌந்தரி சரித்ரம்
12—தாராசசாங்க சரித்ரம்
13—நளதமயந்தி சரித்ரம்

இவை கூடிய விரைவில் வெளிவரும்

தேவைக்கு ஆர்டர் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள்.

## மு. கிருஷ்ண பிள்ளை.

ஏஜண்ட் பி நா சிதம்பர முதலியார் அண்டு கோ,

பிரிண்டர்ஸ், பப்ளிஷர்ஸ் அண்ட் புக்ஸெல்லர்ஸ், மதுரை.